DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

SPL.C.C.No. 8/2025

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.6

Accused present

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.மாரிமுத்து | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 11th day of November, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது இராஜபாளையம் தாலுகா, கிழவிக்குளத்தில் குடியிந்து வருகிறேன். நான் தற்போது சிவலிங்கபுரம் ஊராட்சியில் உதவியாளர்/ ஊராட்சி செயலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2003ம் ஆண்டு நான் இராஜபாளையம் தாலுகா நல்லமநாயக்கன்பட்டி ஊராட்சியில் உதவியாளராக பணியாற்றினேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் பெயர் தங்கம். அவர் 2003ம் ஆண்டு நல்லமநாயக்கன்பட்டி பஞ்சாயத்து தலைவராக இருந்தார். நான் ஊராட்சி வரி வசூல் செய்யும் பணி மற்றும் எழுத்துப்பணிகளை செய்துவந்தேன்.

நல்லமநாயக்கன்பட்டி ஊராட்சியில் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தில் 16.07.2012ம் தேதி சிறப்பு கிராம சபை கூட்டத்தில் 8 பயனாளிகளை தேர்வு செய்து அவர்களுக்கு வீடு கட்டும் பணி ஒதுக்கப்பட்டு தீர்மானம் போடப்பட்டது.

மேற்சொன்ன 8 பயனாளிகளில் 3 பயனாளிகள் வெளியூரில் குடியிருந்து வந்ததால் அவர்களுக்கான வீடு கட்டுவதற்கான வேலை உத்தரவு இரத்து செய்யப்பட்டு அதன்பின்னர் 02.10.2012ம் தேதி மீண்டும் கிராம சபை கூட்டம் நடத்தப்பட்டு அதில் புதுப்பயனாளிகளாக பொன்னுச்சாமி, மாரியம்மாள், நாகராஜ் ஆகிய 3 பேரும் இரத்து செய்யப்பட்டவர்களுக்கு பதிலாக தேர்வு செய்யப்பட்டு அதற்கான தீர்மானம்

இயற்றப்பட்டது. மேற்படி 3 பயனாளிகள் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட விபரம் குறித்து ஆஜர் எதிரியான பஞ்சாயத்து தலைவர், இராஜபாளையம் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு கடிதம் அனுப்பினார்.

அதன்பின்னர் பயனாளிகளுக்கு வட்டார வளர்ச்சி அலுவலகத்திலிருந்து சிமிண்ட் மற்றும் கம்பிகள் வாங்குவதற்கான உத்தரவினை பெறும்பொருட்டு 20 ரூபாய் உறுதி மொழி பத்திரத்தில் பஞ்சாயத்து தலைவர் கையொப்பம் செய்து, வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அனுப்பவேண்டும். 3 பயனாளிகளுக்கு அவ்வாறு உறுதிமொழி பத்திரம் பஞ்சாயத்து அலுவலகத்தில் பயனாளிகளின் கையொப்பம் பெற்று வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது.

வீடு கட்டுவதற்கான வேலை உத்தரவானது வட்டார வளர்ச்சி அலுவலரால் வழங்கப்பட்டு, அதன்பின்னர் காசோலையானது பஞ்சாயத்து தலைவரால் வழங்கப்படவேண்டும். காசோலை விடுவிப்பு உத்தரவு வட்டார வளர்ச்சி அலுவலரால் வழங்கப்பட்ட பின்னர் காசோலையானது வீடு கட்டும் பணிக்காக பஞ்சாயத்து தலைவரால் அவ்வப்போது வழங்கப்படும். காசோலையில் பஞ்சாயத்து தலைவர் மற்றும் உப தலைவர் கையொப்பம் செய்யவேண்டும்.

அதைத்தொடர்ந்து 16.07.2012 அன்று காலை நான் பணிக்கு வந்து விட்டு மதியம் உணவிற்கான எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன். அப்போது எனக்கு தொலைபேசி மூலமாக ஆஜர் எதிரியான பஞ்சாயத்து தலைவர் தங்கம் லஞ்சம் வாங்கி கைது செய்யப்பட்டதாக எனக்கு தெரியவந்தது. அதைத்தொடர்ந்து நான் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலக காவல் ஆய்வாளரிடம் வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை சமர்ப்பித்துள்ளேன்.

என்னிடம் காண்பிக்கப்படும் அசாஆ 10 திருமதி. மாரியம்மாள் என்பவரிடமிருந்து பெறப்பட்ட 20 ரூபாய்க்கான வெற்றுப்பத்திரம் ஆகும். அதில் எந்த விதமான குறிப்போ, பஞ்சாயத்து தலைவரின் கையொப்பமோ இல்லை. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

பசுமை வீடு திட்டத்திற்கான நிதி அரசால் ஒதுக்கப்பட்டு பின்னர் சம்பந்தப்பட்ட ஊராட்சிக்கு ஒதுக்கப்பட்டு, பின்னர் ஒன்றிய ஆணையரின் உத்தரவின் பேரில்

காசோலை வழங்கப்படும். ஊராட்சி காசோலை புத்தகம் உதவியாளரின் பராமரிப்பில் இருக்கும். ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலிருந்து விடுவிப்பு உத்தரவு வந்தவுடன் பயனாளிக்கு தரவேண்டிய காசோலையை செயலாளர் தயார் செய்து தலைவர் மற்றும் உபதலைவரிடம் கையொப்பம் பெற்றபின்பு பயனாளியை வரவழைத்து விடுவிப்பு உத்தரவு நகலுடன் ஒப்படைத்துவிட்டு அதற்கான காசோலையின் அடிக்கட்டையில் கையொப்பம் பெற்றுகொள்வோம். 16.11.2012 ம் தேதி ஊராட்சியில் பராமரிக்கப்படும் வருகை பதிவேட்டில் நான் கையொப்பம் செய்தேன். மதிய உணவு அனுமதி நேரம் மதியம் 2.00 மணி முதல் 3.00 மணி ஆகும். நான் மதிய உணவு வீட்டில் சாப்பிட்டு விட்டு இராஜபாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு சென்றுவிட்டேன். அவ்வாறு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு செல்லும்முன்பாக வருகை பதிவேட்டில் அதற்கான மேற்குறிப்பு செய்யவேண்டும் என்றால் சரிதான். நான் வருகை பதிவேட்டில் அவ்வாறு மேற்குறிப்பு செய்யவில்லை.

பசுமை வீடு திட்டத்தின் கீழான பயனாளிகளின் கோப்பு பற்றிய சந்தேகங்களை கேட்பதற்கான இராஜபாளையம் ஊராட்சி ஒன்றி அலுவலகத்திற்கு சென்றேன். மாலை 5.30 மணிக்கு திரும்பினேன். ஊராட்சி அலுவலகத்திற்கு செல்லவில்லை. அன்றைய தினம் மதியம் நான் ஊராட்சி அலுவலகத்தில் இருந்தேன் என்றும், பொறிவைத்து பிடிக்கும் நடவடிக்கைகள் பாதகமாக இருந்ததால் இராஜபாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு சென்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.